6. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை, 24–8–2011 அன்று வினாக்கள்—விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை (24–8–2011) புதன்கிழமையன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

24–8–2011 அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24–8–2011) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

35. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்தாறாவது

ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

43. பள்ளிக் கல்வித் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் மற்றும் புள்ளிவிவரம், 2011–2012 என்கிற சிறு நூல். (தமிழ்)

44. மானியக் கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

45. மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

46. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

47. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

48. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

49. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

— — —